உதாரணமாக...

### வார்ஹூட்

வார்ஹூட் அஸ்லி கார்டின்ஸ் என்பதில் ஈசோல் (ESOL) கற்க விரும்புகிறார்.அவர் ஒரு மதிப்பீட்டுக்குப் பதிவு செய்கிறார். அவரின் மட்டம் பிரவேசம் 3 என அவருக்குக் கூறப்படுகின்றது. ஆனால் அவர் எழுதுவது அவர் பேசும் அளவுக்கு நல்லதல்ல என அவருக்குச் சொல்லப்படுகின்றது. பொது ஆங்கில பாட நெறியின் பிரவேசம் 3யும் பிரவேசம் 2 எழுத்தியல் வகுப்பையும் எடுத்துக்கொள்ள அவர் தீர்மானிக்கிறார். ஒரு வாரத்தில் 5 நாட்களாக 36 வாரங்களுக்கு திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை 10–12க்கிடையில் அவர் படிப்பார். திங்கள் – வியாழன் பிரவேசம் 3யும் வெள்ளிக்கிழமையில் பிரவேசம் 2 எழுத்தியலையும் படிப்பார். அவருக்கு ஹவுசிங் பெனிவிட் கிடைக்கின்றது. ஆதலால் பரீட்சைப் பணத்தின் அரைப் பகுதியை மாத்திரமே அவர் செலுத்தவேண்டும். பிரவேசம் 2 பாடநெறிக்கு £8யும் பிரவேசம் பாடநெறிக்கு £27*யும் அவர் கட்டுவார்.

### அமின்

அமின் யூகே குடியுரிமையைப் பெற்றுக்கொள்ள விரும்புகிறார். இதற்காக மொழி சான்றுப் பத்திரத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும். மூன்று வழிகளில் அவர் இதனைச் செய்ய முடியும். பொது ஆங்கில பாட நெறி ஒன்றை, பேச்சு, மற்றும் கேட்டல் பாடநெறி ஒன்றை அல்லது பிரித்தானியாவில் வசித்தல் பாடநெறி ஒன்றை அவர் செய்யலாம். கார்ல்டன் செண்டரில் வெள்ளிக்கிழமை காலைகளில் 9.45–11.45க்கிடையில் பிரித்தானியாவில் வசித்தல் பாடநெறியைச் செய்வதற்கு அவர் தீர்மானிக்கிறார். அவருக்குப் பெனிவிட் கிடைப்பதில்லை. அதனால் அவர் £129 (£88 பாட நெறிக்கும் £41பரீட்சைக்குமாக). செலுத்தவேண்டும்.

**இந்தப் பாட நெறிக்கான 2007–08 பரீட்டைப் பணம் தொடர்பான தீர்மானம் இன்னும் எடுக்கப்படவில்லை. ஆதலால் இது ஒரு மதிப்பீடாகும்.*

நாங்கள் வகுப்புக்களை நடத்தும் இடங்கள்...

## பிரதான நிலையங்கள்

**Stonebridge Centre**
1 Morland Gardens
Stonebridge, London NW10 8DY
Tel: 020 8838 2882

**Harlesden Centre**
38 Craven Park
Harlesden, London NW10 4AB
Tel: 020 8961 1315

**Madison House**
24-28 London Road
Wembley, Middlesex HA9 7HD
Tel: 020 9795 3977

**Ashley Gardens**
Off Preston Road
Wembley, Middlesex HA9 8NP
Tel. 020 8908 4426

**Carlton Centre**
Carlton Vale, London NW6 5RA
Tel. 020 7644 9460

### ஏனைய சமூக இடங்கள்

**Queens Park Centre**
Aylestone Avenue
London NW6 7AD
தயவுசெய்து கார்ல்டன் செண்டரைத் தொடர்புகொள்ளவும்.

**Kingsbury Library**
இன்னொரு இடத்தில் அமையவுள்ளது
தயவுசெய்து ஸ்ரோன்பிறிட்சைத் தொடர்புகொள்ளவும்.

**Queensbury Methodist Church**
தயவுசெய்து ஸ்ரோன்பிறிட்சைத் தொடர்புகொள்ளவும்.

கற்றலைச் சமூகத்துக்குள் எடுத்துச் செல்லுதல்

# BACES

## ESOL
**English for Speakers of Other Languages**

**BACES உடன் ஆங்கிலத்தைக் கற்கவும்**
**2007–2008**

Tamil

## BACESஇல் படித்தல்

**நான் எங்கே படிக்க முடியும்?**
எங்களின் பிரதான நிலையங்கள், மற்றும் சமூக இடங்கள் எதிலும் நீங்கள் படிக்கலாம் (இந்தத் துண்டுப்பத்திரத்தின் பின் பக்கத்தைப் பார்க்கவும்)

**ஒரு வாரத்தில் எத்தனை மணித்தியாலங்கள் நான் படிக்கலாம்?**
ஒரு வாரத்தில் 2லிருந்து 15 மணித்தியாலங்கள் வரை நீங்கள் படிக்கலாம்.

**உங்களின் பாடநெறிகள் நாளில் எந்த நேரம் உள்ளன?**
எங்களிடம் காலை, பிற்பகல், மாலை நேர வகுப்புக்கள் உள்ளன.

**உங்களின் பாடநெறிகள் எவ்வளவு காலத்துக்கானவை?**
18 வாரங்கள் (செப்டெம்பரிலிருந்து பெப்ருவரி, அல்லது ஜுலை வரை), 30 அல்லது 36 வாரங்கள் (செப்டெம்பர் – ஜுலை)

**உங்களின் பாடநெறிகள் எந்த மட்டத்திலுள்ளவை?**
ஆரம்பிப்பவர் மட்டத்திலிருந்து முன்னேற்றம் அடைந்தவர் வரையில் பலதரப்பட்ட பாடநெறிகளை நாங்கள் வழங்குகின்றோம்.

**என்ன தகுதியை நான் பெற்றுக்கொள்ள முடியும்?**
எங்களின் பாடநெறிகளில் பெரும்பாலானவை கேம்பிறிட்ச் ஈசோல் ஸ்கில்ஸ் வோர் லைவ் ஒன்றை அல்லது இன்கிலிஸ் ஸ்பீக்கிங் போர்ட் தகுதி ஒன்றைப் பெற இடமளிக்கும்.

**நான் எப்படிச் சேர்ந்துகொள்வது?**
எங்களின் பிரதான நிலையங்கள் எதிலும் நீங்கள் பதிவுசெய்யலாம். நீங்கள் படிக்க விரும்பும் நிலையத்துக்குச் செல்வது சிறந்ததாகும். நீங்கள் பதிவுசெய்ய வரும்போது, (நீங்கள் பெனிவிட் பெறுவதாக இருந்தால்) பெனிவிட் பெறுவதும் பணக் கொடுப்பனவு முறைகள் பற்றியதுமான சான்றை நீங்கள் உங்களுடன் கொண்டுவர வேண்டும்.

நீங்கள் முன்னர் BACES என்பதில் ஈசோலை (ESOL) ஒருபோதும் படித்திருக்காவிட்டால், பதிவுசெய்ய வரும்போது நீங்கள் உங்களின் ILP என்பதை உங்களுடன் கொண்டுவரவேண்டும். கோடை காலம் முழுவதிலும் நீங்கள் பதிவு செய்யலாம். பதிவு செய்தலுக்கான முதல் நாள் எதுவெனக் கண்டுகொள்வதற்கு வரவேற்பிடத்தில், அல்லது உங்களின் ஆசிரியரைக் கேட்கவும்.

## நாங்கள் அளிக்கும் பாட நெறிகள்

**பொது ஆங்கிலம்*** (பேசுதல், கேட்டல், வாசித்தல், மற்றும் எழுதுதல்)
8 hours a week for 36 weeks, அல்லது 15 hours a week for 18 weeks

**பேசுதலும் கேட்டலும்***
4 hours a week for 36 weeks, அல்லது 8 hours a week for 18 weeks

**வாசித்தலும் எழுதுதலும்**
4 hours a week for 36 weeks, அல்லது 8 hours a week for 18 weeks

**எழுத்தியல்** (எழுதுதலை நோக்காகக் கொண்டது)
2 hours a week for 36 weeks

**பிரித்தானியாவில் வசித்தல்*** (குடியுரிமை பெற உங்களுக்கு உதவுதல்)
2 hours a week for 18 weeks

**கொம்பியூட்டர் பாவிப்போருக்கான ஈசோல் (ESOL)**
2 hours a week for 18 weeks

**IELTS** (பிரித்தானிய பல்கலைக் கழகம் செல்ல உங்களுக்கு உதவுதல்)
4 hours a week for 30 weeks

**யுத் குறுப்** (16 – 24 வயதுடையோருக்கானது)
10 hours a week for 36 weeks அல்லது IT உட்படவானால், 12 hours a week

**கார் ஓட்டும் தியறி ரெஸ்டுக்குத் தயார்படுத்தல்**
2 hours a week for 18 weeks

* இந்தப் பாட நெறிகளில் எதிலும் நீங்கள் சித்தி பெற்றால், குடியுரிமை தொடர்பாகவும் குடியமர்வு (தங்குவதற்கான காலவரையறையற்ற அனுமதி) தொடர்பாகவுமுள்ள மொழித் தேவைகளை நீங்கள் திருப்திப்படுத்துவீர்கள்).

எல்லா பாடநெறிகளும் எல்லா நிலையங்களிலும் கிடைப்பதில்லை. நீங்கள் படிக்கவிரும்பும் நிலையத்தில் கேட்கவும். நீங்கள் விரும்பும் பாட நெறிகள் பற்றிய கூடிய தகவலுடன், எங்களின் பிரதான நிலையங்கள் அனைத்திலும் பாடநெறி தகவல் பத்திரங்களை நீங்கள் பெற்றுக்கொள்ளலாம்.

## பாட நெறிகளுக்கான கட்டணங்கள்

2007 செப்டெம்பரிலிருந்து, அரசாங்கம் மேற்கொண்டு எல்லா ஈசோல் மாணவர்களுக்கும் இலவசமான வகுப்புக்களை அளிக்காது. இப்போது சில மாணவர்கள் பணம் செலுத்தவேண்டும்.

வருவாய் மதிப்பிடப்பட்ட (மீன்ஸ் ரெஸ்டெட்) முறையிலான பெனிவிட்டை நீங்கள் பெறுவதாக இருந்தால், உங்களின் வகுப்புக்கள் இலவசமானவை. பரீட்சைக் கட்டணத்தின் அரைப் பகுதியை மாத்திரமே நீங்கள் கட்டவேண்டும் (பாடநெறியின் தன்மையைப் பொறுத்து பரீட்சைக் கட்டணம் வேறுபடுகின்றது. அதனால் வரவேற்பிடத்தில் கேட்கவும்). நீங்கள் வேலை செய்யாதிருந்து உங்களின் மனைவி பெனிவிட் பெறுவதாக இருந்தாலும் இது பொருந்தும். பெனிவிட்டுக்கான சான்றை நீங்கள் காட்டவேண்டும். என்ன விதமான சான்று தேவைப்படுகின்றது என வரவேற்பிடத்தில் கேட்கவும்.

வருவாய் மதிப்பிடப்பட்ட முறையிலான பெனிவிட்டை நீங்கள் பெறுவதில்லை என்றால், பரீட்சைக் கட்டணத்துடன், மணித்தியாலம் ஒன்றுக்கு £2.45 நீங்கள் செலுத்தவேண்டும்.

வருவாய் மதிப்பிடப்பட்ட முறையிலான பெனிவிட்டை நீங்கள் பெறுகிறீர்களா என உங்களுக்குச் சரியாகத் தெரியாவிட்டால், வரவேற்பிடத்தில் கேட்கவும்.

நீங்கள் தற்போது வருவாய் மதிப்பிடப்பட்ட முறையிலான பெனிவிட்டைப் பெற்றுக்கொள்ளாமல், நீங்கள் அதனைப் பெறுவதற்குத் தகுதி உடையவரா என அறிந்துகொள்ள விரும்பினால், பின்வரும் இடங்களிலிருந்து நீங்கள் அறிவுரை பெற முடியும்.

**ஜொப் சென்டர் பிளஸ்–** ஜொப் சீக்கேர்ஸ் எலவன்ஸ், இன்கம் சப்போர்ட், அல்லது வேர்கிங் வமிலீஸ் டைக்ஸ் கிறெடிட் என்பவை பற்றிய தகவலுக்கு.

**வண் –ஸ்ரொப் –சொப்:** ஹவுசிங், மற்றும் கவுன்சில் டைக்ஸ் பெனிவிட் தொடர்பான தகவலுக்கு. 020 8937 1200இல் தொடர்புகொள்ளவும் அல்லது உங்களின் உள்ளூர் வண்–ஸ்ரொப் –சென்டர் அலுவலகத்துக்குச் செல்லவும்.

**டைக்ஸ் கிறெடிட்ஸ் ஹெல்ப்லைன்–** டைக்ஸ் கிறெடிட்டுக்கான பத்திரங்களுக்குக் கோருதல் செய்வதற்கு. 08453003900இல் தொடர்புகொள்ளவும்.

**டிபாட்மெண்ட் ஒவ் வேர்க் அண்ட் பென்சன்ஸ்–** பென்சன் கிறெடிட்ஸ் தொடர்பான தகவலுக்கு.0800991234இல் தொடர்புகொள்ளவும்.

வருவாய் மதிப்பிடப்பட்டதான பெனிவிட்டை நீங்கள் பெற்றுக்கொள்ள முடியாதிருந்து ஈசோல் வகுப்புக்களுக்குச் செல்ல உங்களுக்குப் பண வசதி இல்லாவிட்டால், ஹார்ட்சிப் வண்ட் (கஷ்ட நிவாரண பணம்) என்பதற்கு நீங்கள் தகுதியுடையவரா என வரவேற்பிடத்தில் நீங்கள் கேட்கலாம்.